# தஞ்சாவூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

**மூ.மு.எண்.10781/அ1/2024, நாள்.6.12.2024.**

************

**பொருள்:** பள்ளிக்கல்வி – அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு 24.07.2022 தொகுதி IV தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்ட தஞ்சாவூர், அரசு மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் – இளநிலை உதவியாளர் திரு.க.கார்த்திக் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

**பார்வை:** 1.தஞ்சாவூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.09851/அ1/2023, நாள்.27.09.2023.

2.தஞ்சாவூர், அரசு மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வரின் கடித ந.க.எண்.87/2024, நாள்.13.11.2024.

************

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர், அரசு மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.க.கார்த்திக் என்பார் பார்வை (1) இல் காணும் செயல்முறைகளின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு தேர்வு 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி IV தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்டு 29.09.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரியும் கீழ்காணும் பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | திரு.க.கார்த்திக்,<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம்,<br>தஞ்சாவூர். | 29.09.2023 முற்பகல் | 29.09.2023 முற்பகல் |

இவ்வாணை குறித்து பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அன்னாரின் அசல் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்பி வைத்திட சார்ந்த அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு – அசல் பணிப்பதிவேடு (புத்தக வடிவில்) .

முதன்மைக் கல்வி அலுவலர்,
தஞ்சாவூர்.

பெறுநர் –

திரு.க.கார்த்திக்,
இளநிலை உதவியாளர்,
அரசு மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், தஞ்சாவூர்...( உரிய வழியாக).

நகல் : முதல்வர், அரசு மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், தஞ்சாவூர்.

Scanned with OKEN Scanner